செய்தி வெளியீடு எண்: 423 நாள் : 21.08.2015

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களது சீர்மிகு திட்டங்களில் ஒன்றான சமூகப் பாதுகாப்பு ஓய்வூதிய திட்டங்கள் குறித்த ஆய்வுக் கூட்டம் மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் திரு.ஆர்.பி.உதயகுமார் அவர்கள் தலைமையில் அனைத்து மாவட்ட தனித்துணை ஆட்சியர்களுடன் (சமூகப் பாதுகாப்பு திட்டம்) ஆய்வுக் கூட்டம் சென்னை எழிலகம், வருவாய்த் துறை கூட்ட ஆய்வுக் கூட்டம் நடைப்பெற்றது.

இக்கூட்டத்தில் வருவாய்த் துறை செயலர் திரு.இரா.வெங்கடேசன்,இ.ஆ.ப., கூடுதல் தலைமைச் செயலர் / நில நிருவாக ஆணையர் மற்றும் கூடுதல் தலைமைச் செயலர் / வருவாய் நிருவாக ஆணையர், (பொறுப்பு) திருமதி. கிரிஜாவைத்தியநாதன்,இ.ஆ.ப., சமூகப் பாதுகாப்புத் திட்டங்கள் ஆணையர் திரு.பிரதீப்யாதவ்,இ.ஆ.ப., வருவாய் நிருவாக கூடுதல் ஆணையர் முனைவர் மு.ஜெயராமன், இ.ஆ.ப., மற்றும் துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தமது தலைமையுரையில், ‘‘மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவின் பெயரில், வருவாய்த் துறையின் வரலாற்றில் முதன்முறையாக, சமுதாயத்தில் நலிந்தோர் பெருமளவில் பயன்பெறுகின்ற வகையில், கடந்த 50 ஆண்டுகளாக நடைமுறையில் பின்பற்றப்பட்டு வந்த ஓய்வூதியம் பெறுவதற்கான நிபந்தனைகள், முதன்முறையாக, ஆதரவற்றோர் என்பதற்கான வரையறைகள் ஏப்ரல் 2015ல் தளர்த்தப்பட்டு அரசு ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. இதன்பயனாக, மாநிலம் முழுவதும் பெருமளவிலான முதியோர், விதவைகள், ஆதரவற்ற / கணவரால் கைவிடப்பட்ட பெண்கள், 50 வயதிற்கு மேற்பட்ட திருமணமாகாத ஏழைப் பெண்கள், மாற்றுத் திறனாளிகள் மற்றும் நிலமற்ற விவசாய தொழிலாளர்கள் கூடுதலான எண்ணிக்கையில், பயன்பெறுகின்றனர்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் கடந்த 2011–ஆம் ஆண்டில் ஆட்சி பொறுப்பேற்றவுடன் ரூ.500/– ஆக இருந்த ஓய்வூதியத்தினை முதன் முறையாக, எந்த மாநிலத்திலும் இல்லாத அளவில் ரூ.1000/– ஆக உயர்த்தி வழங்கிட உத்திரவிட்டார்கள்.

அதனடிப்படையில், கடந்த 2011–ஆம் ஆண்டில் 22 இலட்சமாக இருந்த பயனாளிகளின் எண்ணிக்கையானது, நான்காண்டுகளில் 31 இலட்சமாக உயர்ந்துள்ளது. இத்திட்டத்திற்கான நிதி ஒதுக்கீடானது கடந்த 2011–ஆம் ஆண்டில் ரூ.1,200/– கோடியானது தற்போது ரூ.4,198/– கோடியாக உயர்ந்துள்ளது.

இத்திட்டத்தினை மேலும் செம்மைப்படுத்திடும் உயர்ந்த நோக்கில், ஓய்வூதிய பயனாளிகளும் / பொதுமக்களும் பயன் பெறும் வகையில் சமுகப் பாதுகாப்பு திட்டங்களுக்காக முதன் முறையாக கட்டணமில்லா, தொலைபேசி வசதி **(1800–425–1090)** எண் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இத்திட்டங்களின் கீழ் பயன்பெறுகின்ற அனைத்து பயனாளிகளின் விவரங்களும் கணினி மயமாக்கப்பட்டு, இணையதளம் முலம் கண்காணிக்கப்படுகிறது. இதனால் 31 இலட்சம் பயனாளிகளின் இருப்பிடத்திற்கே சென்று ஓய்வூதியம் வழங்கப்படுவது உறுதி செய்யப்படுகிறது.

“மக்களால் நான், மக்களுக்காக நான்” என்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வாக்கினிற்கேற்ப, ஏழை எளிய மற்றும் நலிந்தோர்கள் பயன் பெறுகின்ற வகையில் வருவாய்த்துறையின் சார்பில் செயல்படுத்தப்படுகின்ற இத்திட்டங்களில் செம்மையோடு செயல்பட அலுவலர்கள் நீங்கள் அனைவரும் ஒருங்கிணைந்து பணியாற்றி, வருவாய்த்துறைக்கும் இந்த அரசுக்கும் பெருமை சேர்த்திட வேண்டும்’’. என்று மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

பீரதீப் யாதவ், இ.ஆ.ப.,
ஆணையர் (சமூக பாதுகாப்பு திட்டம்)

**வெளியீடு:**
**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**